விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

# අපනයන කෘෂි මහිම
## (ஏற்றுமதி விவசாய பயிரின் மகிமை)

### தேசிய வாசனைத்திரவிய பயிர் அபிவிருத்தி மற்றும் சார்ந்த கைத்தொழில் மேம்பாடு முதலீட்டுக் கொடை உதவித்திட்டம் - 2025

நூற்றாண்டுகள் பழமையான பெருமைமிக்க ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், உள்ளூர் வாசனைத் திரவிய பொருட்களின் தொழில்துறையின் தற்போதைய முன்னோடியாகும். 2024 ஆம் ஆண்டில், இந்தத் துறை 44,262 மெட்ரிக் டொன் வாசனைப் பொருட்களை ஏற்றுமதி செய்து, நாட்டிற்கு சுமார் ரூபா 89,216 மில்லியன் அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்தது. இதன் பொருட்டு பங்களிப்புச் செய்த வாசனைத் திரவிய பொருள் பயிர்ச் செய்கை நிலப் பரப்பளவு சுமார் 02 ஏக்கர் ஆகம். தற்போது இக்கைத்தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ள விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை 700,000 ஆகும். அவ்வாறே அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள வர்த்தக சமூகம் இலட்சங்களாகும். 2030 ஆம் ஆண்டுக்குள் இந்த உற்பத்தியை 30% ஆகவும், அந்நியச் செலாவணி வருவாயை 80% ஆகவும் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக, தற்போதைய அரசாங்கத்தின் "ஏற்றுமதி விவசாய மகிமை" தேசிய மேம்பாட்டு நடவடிக்கைக்கு இணங்க, நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்ற உள்ளூர் வாசனைத்திரவிய பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் தொடர்புடைய தொழிலாளர்களை மேலும் உயிர்ப்பிப்பு செய்வதன் பொருட்டு 2025 ஆம் ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட சிறப்பு முதலீட்டு உதவித் திட்டம் இப்போது நடைமுறையில் உள்ளது.

**அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் வாசனைத்திரவிய தொழில் சார்ந்த விவசாய முயற்சியான்மையாளராக மாறுவதற்கு நீங்களும் விரும்புகிறீர்களா? அப்படியானால்.....**



இதோ........ **தேசத்தை மதிக்கும் உங்களுக்கு விடப்படும் ஒரு விஷேட அழைப்பாகும்.**



இதன் கீழ் ....................

*தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொடுத்தல்
*பயிர் செய்கை மற்றும் தொழில்துறையை மேம்படுத்துவதற்கான முதலீட்டு உதவி மற்றும் முறையான வழிகாட்டுதல்கள்
*சந்தை ஒருங்கிணைப்பு
*இலவச நாற்றுகள் மற்றும் நடவுப் பொருட்கள்

உங்கள் நிலத்திலிருந்து அதிக அளவிலான அறுவடை, அறுவடைக்கு உரிய அதிக விலை, நீண்டகாலமாக கிடைக்கப் பெறுகின்ற நிலையான வருமானத்துடன் நிலத்திற்கு அதிக பெறுமதி உரித்தாகின்ற உள்ளூர் பகுதியை மதிக்கும், சூழல் கவர் முயற்சியான்மையாளராக மாறி அவ்வாறே கஹவனு இனால் முழு நாட்டையும் வளம் பெறச் செய்த தேசிய அபிவிருத்திக்கு ஊன்றுகோலாக இருக்கும்.

**மிளகு, சாதிக்காய், கிராம்பு, ஏலக்காய், கோப்பி, கொக்கோ, வெணிலா, வெற்றிலை, பாக்கு, சிட்ரனெல்லா, சேர, மஞ்சள் மற்றும் இஞ்சி, குரக்காய்**

போன்ற ஏற்றுமதி விவசாய பயிர்ச் செய்கை மற்றும் அது சார்ந்த உற்பத்தித் தொழில்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன....

## செய்கை முதலீட்டு மேம்பாட்டு வேலைத்திட்டம்

### 01. புதிய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டம்

இதன் கீழ், ஒற்றைப் பயிர் செய்கை, தேயிலை, தென்னை மற்றும் இரப்பர் தோட்டங்களில் ஊடுபயிர் செய்கை, அரச அல்லது தனியார் துறை தோட்டங்கள், அரச அல்லது அரை-அரச துறை நிலங்கள் அல்லது சிறப்பு தொழில்நுட்ப முறைகள் ஆகியவற்றின் கீழ் ஏற்றுமதி பயிர் செய்கையை ஊக்குவித்து பரிசீலிக்கப்படுகிறது.
- இதற்காக, 0.05 ஹெக்டேயர் முதல் அதிகபட்சம் 20 ஹெக்டேயர் வரையிலான நிலங்களுக்கு நடவுப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

### 02. வீட்டுத் தோட்டம் மற்றும் ஏனைய

சிறிய அளவிலான தோட்டங்கள், அரசு நிறுவனங்களின் தோட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் போன்ற விஷேட தேவைகளுக்கு இலவசமாக நாற்றுகள் வழங்கப்படுகின்றன.

### 03. மஞ்சல் மற்றும் இஞ்சி செய்கையை மேம்படுத்துதல்.

20 பேர்ச்சஸ் முதல் 01 ஹெக்டேயர் வரை நடப்பட்ட விதை கிழங்கின் அளவைக் கருத்தில் கொண்டு முதலீட்டு உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### 04. தனியார் நாற்றுமேடையை ஆரம்பித்து அபிவிருத்தி செய்தல்

ஏற்கனவே உள்ள நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் நுண் நீர்ப்பாசன அமைப்புகள், புதிய நிழல் இல்லங்களை நிர்மானித்தல், புதுப்பித்தல் மற்றும் தற்காலிக நிழல் வழங்கள்.

### 05. தற்போது உள்ள செய்கைளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்

இதன் கீழ், காலி இடங்களில் நடவு செய்வதற்கு நாற்றுகளை வழங்குதல், பீடைத்தாக்க கட்டுப்பாடு, நீர் வழங்கல் அமைப்புகள் அமைத்தல், மின்சார வேலி அமைத்தல் போன்றவற்றுக்கு முதலீட்டு கொடையை பெற்றுக் கொள்ளலாம்.

* இந்தத் திட்டம் மிளகு, கொக்கோ, கோப்பி, ஏலக்காய், சாதிக்காய் மற்றும் கிராம்பு பயிர்களின் பொருட்டு செயற்படுத்தப்படுகின்றது.
* பயிர்ச் செய்கையில் 50% வரை நாற்றுக்களை இலவசமாக வழங்கப்படலாம் மற்றும் செய்கை பராமரிப்புக்காக செய்கைக்கான முதலீட்டு உதவி தொகையை பெறலாம், மேலும் அதன் அதிகபட்ச பரப்பளவு 04 ஹெக்டேயர் ஆகும். இருப்பினும், தோட்ட நிறுவனங்களுக்கு, 20 ஹெக்டேயர் வரை இலவச நாற்றுகள் மட்டுமே வழங்கப்படும்.

### 06. பாக்குச் செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டம

புதிய செய்கை, ஊடுபயிர் செய்கை மற்றும் நீர்ப்பாசன கரையோரங்கள் இரு மருங்கிலும் அருவிகளும் அணைகளும், கரையோரம் மற்றும் மண் பாதுகாப்பு போன்ற வேலைத் திட்டங்கள் பொருட்டு விவசாய அமைப்புகள் மற்றும் அரச நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் செய்கை வேலைத் திட்டங்களுக்கு தேவையான பாக்கு கன்றுகள் பரிந்துரைக்கப்பட்ட அளவு இலவசமாக வழங்கப்படுகின்றன.

## தரமான அறுவடை, பதப்படுத்துதல் மற்றும் பொருத்தமான தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டம்

இந்தத் திட்டத்தின் கீழ், ஏற்றுமதி பயிர்களுக்கான அறுவடைக்கு முந்தைய மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை கொள்வனவு செய்தல், பதப்படுத்தும் நிலையங்களை நிர்மாணித்தல், எண்ணெய் பிரித்தெடுக்கும் அலகுகளை நிறுவுதல் போன்றவற்றுக்கு முதலீட்டு உதவி தொகை பெற்றுக் கொடுக்கப்படும்.

### 01. அறுவடை செயலாக்க உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள்

* அறுவடைக்கு முந்தைய செயலாக்க தொழில்நுட்ப உபகரணங்கள் / இயந்திரங்கள் - செய்கை மேற்கொள்ளல், பயிர் பராமரிப்பு, அறுவடை மற்றும் தொடர்புடைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்.

* அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப உபகரணங்கள் / இயந்திரங்கள் - அறுவடை செய்ததன் பின்னர் அறுவடையை தரத்துடன் பதப்படுத்தி, அறுவடைக்குப் பிறகு சரியான தரங்களுடன் சந்தைக்கு வழங்குவதற்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்.

### 02. வாசனைத்திரவிய பதனிடும் நிலையம் மற்றும் களஞ்சிய வசதிகள்

சிறிய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிலையங்களின் அபிவிருத்தி, தற்போது உள்ள கட்டிடங்களை விரிவாக்கள், மேம்படுத்துதல், மத்திய செயலாக்க நிலையம், களஞ்சிய வசதிகள் ஸ்தாபித்தல் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தித் தொழில்களை பொருட்டு முதலீட்டு உதவி தொகை வழங்கள

### 03. தரநிலைகள் மற்றும் தரச் சான்றிதழ்கள் பெற்றுக் கொடுத்தல.

* வாசனைத் திரவிய பயிர்ச் செய்கை, உற்பத்தி, உற்பத்தி முறைகள், ஆய்வக தரநிலைகள் மற்றும் தரச் சான்றிதழ்கள் (GAP, GMP, ISO 22000, FSSC 22000, HACCP, BRCGS, SLS) மற்றும் கரிம வேளாண்மை போன்றவை) ஆகியவற்றிற்கான வழிகாட்டுதல் மற்றும் சான்றிதழ்களைப் பெற முதலீட்டு உதவி தொகை பெற்றுக் கொடுக்கப்படும்.

## ஏனைய ஆலோசணைகள் மற்றும் ஏனைய விரிவாக்கள் சேவைகள்

☐ நடுகை நில பரீட்சிப்பு, மண் பரிசோதனை, பயிர் முகாமை, அறுவடை தரநிலை பரிசோதனை, சந்தை ஒருங்கிணைப்பு, இயந்திர பொறிகள் தொடர்பதன தொழில்நுட்ப ஆலோசனைகள், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் மேம்பாடு மற்றும் மின்னனு, அச்சு ஊடகங்கள் மற்றும் இணையதளம் போன்ற சமூக ஊடகங்கள் மூலம் தொழில்நுட்ப அறிவை வழங்குதல் மற்றும் பங்குதாரர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குதல்.

*கவனிக்க : வருடாந்த ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் அவ்வப்போது செயற்படுத்தப்படுகின்ற அரசாங்கக் கொள்கைகளின்அடிப்படையில் இந்த முதலீட்டு கொடை முறைகள் மற்றும் தொகைகள் திருத்தத்திற்கு உட்பட்டவை. அவ்வாறே ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் ஊடாக ஏற்றுமதி விவசாய வேலைத்திட்டத்திற்கு உரியதாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் அதற்கு உரியதான நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.*


பணிப்பாளர் நாயகம்
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்,
இலக்கம் 1095,
கெடம்பே, பேராதனை


மேலதிக விபரங்களுக்கு
**081 2388651** நீடிப்பு 111
ஏற்றுமதி விவசாய தகவல் நிலையம்
ஏற்றுமதி விவசாய விரிவாக்கல்
ஏற்றுமதி விவசாய விரிவாக்கள் உத்தியோகத்தர்
ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிரதேச கமநல சேவை நிலையத்தில்
உதவிப் பணிப்பாளர்
ஏற்றுமதி விவசாய மாவட்ட பணிமனையில்

**கொட்டகைகளால் நிரம்பிய நாடு**
**வளமான எதிர்காலத்திற்காக**
ஏற்றுமதி விவசாயத் தொழிலை விருத்தி செய்வோம்.
ஏற்றுமதி விவசாய விரிவாக்கல்


+ 94 812 388651
helpdesk@dea.gov.lk
www.dea.gov.lk
Department of Export Agriculture